# “அவருடைய நாமத்தினாலே”

# (3:12-26)

நாம் பிறக்கும்போது, நமது பெற்றோர்கள் நமக்குப் பெயர்கள் கொடுக்கின்றனர். நாம் வளரும்போது, அப்பெயர்கள் பொருளையும், விசேஷித்த தன்மையையும் எடுத்துக்கொள்கின்றன. இதன் விளைவாக, நமது பெயர்கள் நம்மை அடையாளப்படுத்துவதோடு, நாம் எப்படியிருக்கிறோம் என்பதையும் நிலைநிறுத்துகின்றன. நீங்கள் நன்கு அறிந்த ஒருவரின் பெயரை நினைத்துப் பாருங்கள். அப்பெயரின் வெறும் எழுத்துக்களின் சேர்க்கையை மட்டுமா நினைக்கின்றீர்கள்? அந்நபரின் சில குறிப்பிட்ட பண்புகளின் விளக்கம் உங்கள் சிந்தையில் எழுகின்றது. நீங்கள் ஒரு முழு ஆள்தன்மையையே அப்பெயரின் மூலம் காண்கின்றீர்கள்.

வேதாகமத்தில் உள்ள பெயர்கள், தனிநபர்களை அடையாளம் காட்டுவதோடு, அவர்களின் அனைத்துப் பண்புகளையும் வெளிப்படுத்துகின்றன. யாத்திராகமம் 20ல் மூன்றாவது கட்டளையாக, “உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்” (வ. 7) என்றுள்ளது. தமது நாமத்தை வீணிலே வழங்குகிறவர்கள் மேல் தேவன் ஒரு சாபத்தைக் கூறியது ஏன்? ஏனென்றால் நீங்கள் அவரது நாமத்தைத் தவறாக நடத்துகையில் அவரைத் தவறாக நடத்துகிறீர்கள் என்றாகிறது!

அப். 3 மற்றும் 4ல் இயேசு கிறிஸ்துவின் நாமம் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது (3:6, 16; 4:7, 10, 12, 17, 18, 30). இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்குப் பிறகு ...

> ... தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,

*பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைப்பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2:9-11).*

*அப். 3 மற்றும் 4ல் நாம், அவருடைய நாமத்தினாலே குணப்படுத்துதலையும், அவருடைய நாமத்தைப் பிரசங்கிப் பதையும், அவருடைய நாமத்திற்காக உபத்திரவப்படுவதை யும், அவருடைய நாமத்தின்மூலம் பெலன் பெறுவதையும் படிக்கின்றோம். இவ்விரு அதிகாரங்களின் பாடங்களை நாம் தொடர்ந்து படிக்கையில், இயேசு என்ற பெயர் அவரை அடை யாளம் காட்டுவதோடு நிற்பதில்லை என்பது தெளிவாகும்; அவரது நாமத்தில் அவரது வல்லமை, அவரது நோக்கங்கள், அவரது ஆள்தன்மை ஆகிய அனைத்தும் மறைந்து கிடைக்கின் றன! இவ்விரண்டு அதிகாரங்களிலும் பேதுருவோ அல்லது யோவானோ, குணமாக்கப்பட்ட மனிதனோ அல்லது சங்கத் தின் எந்தவொரு உறுப்பினரோ முக்கிய நபரல்ல. இயேசு கிறிஸ் துவே நாயகராக விளங்குகின்றார்! யூத தலைவர்கள் இயேசு வைத் தங்களை விட்டு நீக்கிப்போட்டுவிட்டதாக எண்ணினர்; இப்பொழுதோ இயேசுவைக் குறித்து அவர்கள் மறுபடி செயல்பட வேண்டியதாயிற்று.*

*அப். 3ன் நிறைவுப் பகுதியில், பேதுருவின் பதிவு செய்யப் பட்ட இரண்டாவது பிரசங்கத்தை நாம் பெற்றுள்ளோம், அப்பிரசங்கத்தை அவர் முடிக்காமல் விட்டார் (4:1ஐக் கவனிக் கவும்). புறக்குறிப்பில் இதன் அமைப்பும், அப். 2ல் கொடுத்த பிரசங்கத்தின் அமைப்பும் ஒன்றாகவே உள்ளது, இதில் உதவிக்கான குறிப்புகள் மாறுபட்டுள்ளன.[1] அப். 2ல் பேதுரு பெரும்பாலும் தாவீதிடமிருந்து மேற்கோள்களைக் காட்டி னார்; இந்தப் பிரசங்கத்தில் அவர் பழைய ஏற்பாட்டின் மற்ற ஆதாரங்களைச் சார்ந்திருந்தார். இயேசுவுக்குப் பலவகையான பெயர்களை வழங்குவதே இப்பிரசங்கத்தின் சிறப்பம்சமா யுள்ளது. அப். 2ல் பேதுரு இயேசுவை தாவீதின் குமாரனாகவும் கிறிஸ்துவாகவும் காண்பித்தார்; இந்தப் பிரசங்கத்தில், அப்போஸ்தலர் இயேசுவை, தேவனுடைய ஊழியக்காரராக வும், பரிசுத்தமும் நீதியுமுள்ளவராகவும், ஜீவாதிபதியாகவும், மோசேயைப் போன்ற தீர்க்கதரிசியாகவும் காண்பிக்கின்றார்.*

## தகுதிப்படுத்துதல் மறுதலிக்கப்படுதல் (3:12)

இந்த நேரத்தில் எல்லாம், மக்கள் பேதுரு யோவான் மற்றும் அந்தப் பிச்சைக்காரன் ஆகியோரைச் சுற்றிக் கூடி வந்தனர். நிறைவாக, ஒவ்வொருவரும் தயாராயினர், கூட்டம் அமைதியாயிற்று. பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: "இஸ்ரவேலரே, இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன?" (வ. 12அ). கடந்த காலத்தில், இயேசு எருசலேமில் வியாதியுள்ளவர்களைக் குணப்படுத்தியதை அடிக்கடி அவர்கள் கண்டுள்ளனர். குணமாக்கப்பட்ட மனிதனைச் சுட்டிக் காட்டிப் பேதுரு தொடர்ந்து, "... நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுய பக்தியினாலாவது,[2] இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?" (வ. 12ஆ) என்றார்.

பேதுருவும் யோவானும், தாங்கள் சிறப்பிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளச் சோதிக்கப்படாமலாவது இருந்திருந்தால் அவர்கள் மனிதத் தன்மைக்குக் குறைவானவர்களாக இருந்திருப்பார்கள். சற்று நாட்களுக்கு முன்புதான் யார் பெரியவன் என்று விவாதம் செய்த குழுவில் அவர்கள் இருந்தனர் (மாற். 9:34). இப்பொழுது அவர்களுக்கு வாய்ப்பு உண்டாயிருந்தது! குணமாக்கியதில் தங்கள் சுயசக்தியோ, சுய பக்தியோ ஒன்றும் செய்யவில்லை என்று பேதுரு உடனே மறுதலித்தது எவ்வள வாய் நினைவு கூறத்தக்கது! இந்நாட்களில் குணமாக்குவோர் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் தயக்கமின்றி பெரும்புகழ்ச்சியை ஏற்றுக்கொள்வதிலிருந்து அது எவ்வளவாய் மாறுபடுகின்றது!

## திறனாய்வு முன்வைக்கப்படுதல் (3:13-15)

ஒரு கணத்தில், பேதுரு அந்தக் குணப்படுத்தலுக்கான பாராட்டை இயேசுவுக்கு அளித்தார். இதை நோக்கி வழி நடத்துகையில், தொடர்ச்சியாக சில மாறுபாடுகளைப் பயன்படுத்தி அவர்கள் இயேசுவை நடத்தின விதம்பற்றி

*அவர் திறனாய்வு செய்தார். முதல் மாறுபாடு வசனம் 13ல் கூறப்படுகிறது.*

> *ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய [யாத். 3:6, 15ல் தேவன் தம்மை மோசேக்கு இவ்விதமாய் அறிமுகப்படுத்தினார்] நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய[3] இயேசுவை மகிமைப் படுத்தினார்; அவரை நீங்கள் ஒப்புக் கொடுத்தீர்கள்; பிலாத்து அவரை விடுதலையாக்கத் தீர்மானித்தபோது, அவனுக்கு முன்பாக அவரை மறுதலித்தீர்கள்.*

*இயேசுவுக்குப் பேதுரு பயன்படுத்தும் முதல் பெயர் இங்குள்ளது: தேவனுடைய ஊழியன் (வசனம் 26ல் இது மறுபடியும் கூறப்படுகிறது). ஏசாயா புத்தகத்தின் மாபெரும் கருத்துக்களில், பாடுபடும் ஊழியக்காரன் (ஏசா. 53; அப். 8) என்பதும் ஒன்றாகும், இது சங்கீதங்களிலும்[4] மற்ற இடங்களி லும் எதிரொலிக்கின்றது. தீர்க்கதரிசிகளால் கூறப்பட்ட ஊழியக்காரர் இந்த இயேசுவே என்று தம் உரையைக் கேட்டவர்கள் அறியும்படி பேதுரு விரும்பினார்!*

*தேவன் தமது ஊழியக்காரரை என்ன செய்தார்? அவரை அவர் "மகிமைப்படுத்தினார்." இதற்கு மாறாக யூதர்கள் அவரை என்ன செய்தனர்? அவர்களின் தலைவர்கள் அவரைப் பிலாத்து விடம்[5] ஒப்புக்கொடுத்தனர். பின்பு அக்கூட்டம் அவரை "மறுதலித்தது." பிலாத்து அவர்களை நோக்கி: "அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்ட பொழுது, "அவனைச் சிலுவையி லறைய வேண்டும்" என்று "அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்" (மத். 27:22, 23).*

*வசனம் 13ன் நிறைவுப்பகுதியில் இரண்டாவது மாறுபாடு உள்ளது, புனிதத்தன்மையற்ற ரோம ஆளுநனாகிய பிலாத்து ஒரு புறம் இயேசுவை விடுதலை செய்ய மனதாயிருந்தான். மறுபுறமோ,தேவனுடைய ஜனங்கள் அவரது மரணத்தை விரும்பிக் கேட்டனர். அந்த புகழ்ச்சியற்ற நேரத்தை நினைவுக் குக் கொண்டுவந்து, சிலராவது தங்கள் தலைகளைத் தொங்க விட்டிருப்பார்கள்.*

மூன்றாவது மாறுபாடாகப் பேதுரு கூறுவதும், இயேசுவுக்கு அவர் அளிக்கும் இரண்டாவது பெயரும் வசனம் 14ல் வருகின்றது: "பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலை பாதகனை உங்களுக்காக விடுதலை பண்ண வேண்டு மென்று கேட்டு." "பரிசுத்தமும்[6] நீதியும்[7] உள்ளவர்" என்பது பழைய ஏற்பாட்டில் வேர் கொண்டுள்ள இரு அடை மொழிகளால் ஆன பெயர் ஆகும். அசுத்த ஆவிகள், இயேசுவை ''தேவனுடைய பரிசுத்தர்'' என்று அறிக்கையிட்டபோது அவைகள் அவருடைய தேவத்துவத்தை ஒப்புக்கொண்டன (மாற். 1:24).[8] பரிசுத்தமும் நீதியுமுள்ளவரான இயேசுவுக்கும், கொலைகாரனான பரபாசுக்கும் இடையில் மாறுபாடு இருந்தன. பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை அக்கூட்டம் என்ன செய்தது? அவர்கள் அவரை மறுதலித்து, சிலுவையிலறையும் படி வேண்டிக் கேட்டனர். கலகக்காரனும், கொலைகாரனு மான பரபாசுக்கு அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் அவனை விடுதலை செய்யும்படிக் கேட்டனர் (லூக். 23:13-25).

வசனம் 14ன் நிறைவுப் பகுதியிலும் வசனம் 15ன் தொடக்கப் பகுதியிலும் நான்காவது மாறுபாடு காணப் படுகிறது: ''...கொலைபாதகனை உங்களுக்காக விடுதலை பண்ண வேண்டுமென்று கேட்டு, ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்.'' ''அதிபதி'' (*archegos*) என்று மொழியாக்கம் செய்யப்பட்ட கிரேக்க வார்த்தையானது "முன்னிருப்பவர்" என்ற நேரடிப் பொருள் கொண்டதாகும். புதிய ஏற்பாட்டில் இது நான்கு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக இது, "துவங்கி வைக்கும் ஒருவர்" அல்லது "முன் செல்லும் ஒருவர்" என்று பொருள்படும். இச்சொற்றொடரானது, NIVயில் ''ஜீவாதிபதி'' என்று மொழியாக்கப்பட்டுள்ளது. புதிய நூற்றாண்டு மொழிபெயர்ப்பில் இது "ஜீவனைக் கொடுக்கிற ஒருவர்" என்றுள்ளது. உயிரை எடுக்கும் பரபாசுக்கும், உயிருக்கு மூலாதாரமாகிய இயேசுவுக்குமிடையே இங்கு மாறுபாடு காட்டப்படுகிறது. பேதுரு கூறியதன் சாரமாவது: "உயிரை அழிப்பவனை நீங்கள் விடுதலையாக்கி, உயிரைக் கொடுப் பவரை அழிக்க முயற்சி செய்தீர்கள்."

## *உயிர்த்தெழுதல் அறிவிக்கப்படுதல் (3:15)*

*ஜீவனுக்கு மூலாதாரமாக உள்ளவரையே மரணத்திற்குக் கையளிக்கச் செய்யப்பட்ட இம்முயற்சியைக் காட்டிலும் வீணானது வேறு ஒன்றும் இல்லை. வசனம் 15ல் பேதுரு கூறும் கடைசி மாறுபாட்டில் அவர்களின் வீணான செயல்பாடு குறிப்பிடப்படுகிறது: ''ஜீவாதிபதியை [நீங்கள்] கொலை செய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்.'' யூதர்கள் இயேசுவைக் கொலை செய்தனர், ஆனால் தேவன் அவரை எழுப்பினார். "கல்வாரி என்பது மனிதனின் கடைசி வார்த்தையாயிருக்கலாம். ஆனால் வெறுமையான கல்லறை என்பதே தேவனின் கடைசி வார்த்தையாய் இருந்தது" என்று வாரன் W. வயர்ஸ்ப் கூறுகிறார்.*

*பேதுரு தமது உரையைக் கேட்டவர்களின் குற்றத்தை வலியுறுத்தினார் என்பதைக் கவனியுங்கள்! மக்கள் அவர்களின் பாவங்களிலிருந்து மனந்திரும்புமுன்னர் அவர்களின் பாவங்கள் அவர்களுக்கு உணர்த்தப்படவேண்டும். இரட்சிப்பின் நற்செய்தி பிரசங்கிக்கப்படுமுன்னர், பாவத்தின் தீயசெய்தி முன்வைக்கப்பட வேண்டும். மக்கள் தாங்கள் குணப்படுவதற்கு விரும்புமுன்னர், அவர்கள் எவ்வளவாய் சுகமற்று இருக்கிறார்கள் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும்.*

*வசனம் 15ல் உயிர்த்தெழுதலைப்பற்றிக் குறிப்பிட்டபோது, பேதுரு அநேகமாக தம்மையும் யோவானையும் சுட்டிக்காட்டி, "... அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்று கூறியிருக்க வேண்டும். அம்மனிதன் குணமடைய அவர்கள் காரணமாயிருந்தபடியால், இது உயிர்த்தெழுதலுக்கு ஒரு பெலமுள்ள சாட்சியாய் இருந்தது.*

## *இரட்சகர் உயர்த்தப்படுதல் (3:16)*

*பேதுரு கூறிய ஒவ்வொன்றும் இயேசுவின் நாமம் உயர்த்தப்படுவதற்கே வழியாயிற்று: "அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க*

சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" (வ. 16). மூல மொழி மற்றும் ஆங்கில மொழியாக்கம் ஆகிய இரண்டிலும் இவ்வாக்கிய மானது அழகற்றுள்ளது - வேண்டுமென்றே அப்படி உள்ளது. பேதுரு கூறியவற்றை மிகச் சரியாக அவர் கூறிய முறையிலேயே எழுதியுள்ளதால் இது அவ்வாறு அழகற்றுள்ளது. நாம் பேசும்போது, எல்லா சமயங்களிலும் வாக்கியங்களை நிறைவு செய்தோ அல்லது சரியான இலக்கணப்படியோ பேசுவதில்லை, மற்றும் நாம் பேசினதையே மறுபடி பேசுவதற்கு முனைவோம். வசனம் 16 வரையிலும் லூக்கா ஆவிக்குரிய ஏவுதலினால் திருத்தங்கள் எவையேனும் செய்திருக்கலாம், ஆனால் வசனம் 16 இப்பிரசங்கத்தின் மையமான பகுதியானதால், பேதுரு பயன்படுத்திய அதே வார்த்தைகளை லூக்கா இங்கு தர விரும்பியுள்ளார். (நடபடிகள் நூலில் லூக்கா எந்த ஒரு பிரசங்கத்தையும் "கண்டுபிடித்து" புகுத்தவில்லை என்பதற்கும், அப்போஸ்தலர்களுடைய "வாய்களில் அவர் வார்த்தைகளைப் போடவில்லை" என்பதற்கும் இது சான்றாகும்.)

அழகற்றதோ அல்லவோ, பேதுருவின் செய்தி மிகத் தெளி வாயிருந்தது: பேதுரு மற்றும் யோவானிடம் ஏதேனும் மாய சக்தியிருந்து, அதனால் அம்மனிதன் குணமடையவில்லை. மாறாக இயேசுவின் நாமத்தினாலேயே அவன் முழுமையாக்கப் பட்டான்!

இயேசுவின்மேலும் அவரது நாமத்தின்மேலும் உள்ள விசுவாசம் வலியுறுத்தப்படுவதைக் கவனியுங்கள்: "அவருடைய நாமத்தில் கொண்ட விசுவாசத்தினாலே"யே குணமாயிற்று; அது "அவரால் உண்டாகிய [வந்த] விசுவாசமாகும்" அதுவே அம்மனிதனுக்குச் "சர்வாங்க சுகத்தை"க் கொடுத்திருந்தது. இங்கு பேசப்படுவது குணமாக்கப்பட்டவனின் விசுவாசம் அல்ல (ஏற்கனவே குறிப்பிட்டபடி, அவன் தான் குணமாகு தலை எதிர்பார்க்கவேயில்லை); மாறாக இங்கு குறிப்பிடப் படுவது பேதுரு மற்றும் யோவான் ஆகியோரின் விசுவாசம் ஆகும். முன்பு, சீஷர்கள் பிசாசைத் துரத்த முடியாமற் போன போது, அவர்களின் விசுவாசக் குறைவினால்தான் அவ்வாறா யிற்று என்று இயேசு கூறினாரே தவிர, பிசாசு பிடித்தவனுக்கு விசுவாசக் குறைவு இருந்ததென்று அவர் கூறவில்லை (இ.வ. மத். 17:20). இயேசு உயிர்த்தெழுந்தபின் பதினொருவருக்குத்

*தரிசனமானபோது "அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து அவர்களைக் கடிந்து கொண்டார்" (மாற். 16:14). பிரதான கட்டளையின்மூலம் அவர்களுக்கு அறைகூவல் விடுத்தபின்பு, அவர் அவர்களை நோக்கி:*

> *விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார் (மாற். 16:17, 18).*

*அப்போஸ்தலர்கள் விசுவாசித்தால் "அவருடைய நாமத்தினாலே" வியாதிஸ்தரைக் குணப்படுத்த முடியும் என்று இயேசு கூறியிருந்தார். இதுவே அப். 3ல் நடந்த செயல் ஆகும்.*

*பேதுருவின் சிந்தனைக் கோட்டை நாம் கவனிப்போம்: அம்மனிதன் அற்புதமாய்க் குணமாக்கப்பட்டதை எவரும் மறுக்க முடியாதென்பதாலும், அம்மனிதன் இயேசுவின் நாமத்தினாலே குணமாக்கப்பட்டான் என்பதாலும், இயேசுவே மேசியாவாய் இருக்க வேண்டும்! பெந்தெகொஸ்தே நாள் அன்று பேதுரு தம் பிரசங்கத்தில் கூறியதும் இதே கருத்துதான்: அநேக காலங்களாகத் தாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒருவரை யூதர்கள் கொலை செய்திருந்தனர்!*

## *மறு உறுதிப்பாடு விரிவாக்கப்படுதல் (3:17, 18)*

*அவர்கள் குற்ற உணர்வால் மூழ்கடிக்கப்பட்டு விடாதபடிக்கு, விரைவிலேயே பேதுரு, "சகோதரரே, நீங்களும், உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" (வ. 17; 13:27; 1 கொரி. 2:8) என்று கூட்டிச் சொன்னார். பேதுரு அன்பாக இருந்தார் (நாம் நீதியுள்ளவர்கள் என்பதற்காக அனைவரும் எதிர்க்கும்படியான குணமுள்ளவர்களாகவோ, நாம் மனிதத் தன்மையுடையவர்கள் என்பதற்காக இரக்கமற்ற விதத்திலோ நடந்து கொள்ளக் கூடாது). அவர், "இயேசு யார் என்பதை நீங்கள் உண்மையாகப் புரிந்திருந்தால்*

*நீங்கள் அவரைக் கொன்றிருப்பீர்கள் என்று நான் நம்ப மாட்டேன்" என்று பொருள்படும்படிப் பேசினார். பேதுருவின் கூற்றைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். இயேசு யார் என்று அறிந்து கொள்ளும் வாய்ப்பை அவர்கள் பெறவில்லை என்று பேதுரு கூறவில்லை; அவர்களது சுய முன்தீர்மானத்தின் விளைவாய் உண்டான சுய கௌரவத்தினால் அறியாமை ஏற்பட்டது. அதே சமயம் அவர்களது அறியாமை அவர்களது குற்றங்களைக் குறைத்ததென்றும் பேதுரு கூறவில்லை; சுருக்கமாக, அவர்கள் மனந்திரும்பும்படி அவர் கூறினார். "அறியாமையினால் அப்படிப்பட்ட செயலை அவர்கள் செய்ததினால்" அவர் களுக்கு நம்பிக்கையுண்டு என்று பேதுரு கூறினார். நியாயப் பிரமாணத்தின் கீழ், அறியாமையினால் செய்கின்ற பாவங்கள் மற்றும் துணிகரமான பாவங்கள் ஆகியவற்றிற்கிடையே வேறுபாடு இருந்தது (லேவி. 4: 5; எண். 15:22-31). அறியாமல் செய்த பாவங்களுக்குப் பலிகள் செலுத்தப்படக்கூடும்; அப்படிப்பட்ட பாவங்கள் மன்னிக்கப் படமுடியும். ஆனால் துணிகரமான பாவங்களுக்குப் பலி செலுத்தப்பட முடியாது. எபிரெய ஆசிரியர் (10:26) இதை "மனப்பூர்வமான பாவம்" என்று அழைக்கிறார். அப்படிப்பட்ட முரட்டாட்டம் உள்ளவன் ஜனத்திலிருந்து "அறுப்புண்டு" போவான்; பெரும்பாலும் அவன் கல்லெறிந்து கொல்லப் படுவான். பேதுருவின் வார்த்தைகளில் நம்பிக்கை இருந்தது: "நீங்கள் அறியாமையினாலே செய்தீர்கள்."*

*ஆயினும், அவர்கள் அறியாமையென்னும் திரைக்குப் பின்னாலேயே தொடர்ந்து ஒளிந்துக் கொண்டிருக்கக் கூடா திருந்தது. பேதுரு தொடர்ந்தார்: "கிறிஸ்து பாடுபட வேண்டு மென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறை வேற்றினார்" (வ. 18). அவர்கள் தீர்க்கதரிசனங்களைச் சரியாகப் படித்திருந்தால் அவர்களின் அறியாமை அகன்றிருக்கும். கிறிஸ்து என்ற மேசியா துன்பப்படவேண்டும் என்று கற்றிருப் பார்கள். இயேசு துன்பப்பட்டபோது அத்துன்பமானது அவர் மேசியாவாக உள்ளதற்கான தகுதியை அற்றுப்போகச் செய்ய வில்லை; மாறாக அது அவரது தகுதியாம்சத்தின்[9] இன்றியமை யாத ஒரு பாகமாயிற்று.*

## மனந்திரும்புதல் தேவைப்படுதல் *(3:19, 20)*

*தீர்க்கதரிசிகளை அட்டவணைப்படுத்திக் கூறுமுன், பேதுரு தம் உரையைக் கேட்டவர்களிடத்தில், மனந்திரும்பி தேவனிடத்திற்குத் திரும்பும்படி அறைகூவல் விடுத்தார்: ''ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ் துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" (வ. 19, 20).*

*வசனங்கள் 12 முதல் 26 வரையான இப்பாடத்தை நாம் ஆரம்பிக்கையில், இது ஒரு முடிவுபெறாத பிரசங்கம் என்று நான் குறிப்பிட்டேன். அதிகாரம் 4ன் முதல் வசனம், "அவர்கள் ஜனங்களுடனே பேசிக்கொண்டிருக்கையில்'' பேதுருவும் யோவானும் கைது செய்யப்பட்டதாகக் கூறுகிறது. பேதுரு இவ்விடத்தில் தாம் 2:38ல்[10] செய்ததுபோல, இயேசுவினிடத்தில் திரும்புவதற்குத் தேவையான எல்லாவற்றையும் கூற வாய்ப்புப் பெற்றிருக்கவில்லை. ஆயினும் கூட, 3:19, 20ல் பேதுருவின் தொடக்கக் கூற்றினை 2:38ன் முடிவுக் கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அறிவுறுத்தப்படுகின்றது:*

| ***அப். 2:38*** | ***அப். 3:19, 20*** |
|---|---|
| *"மனந்திரும்பி,* | *"மனந்திரும்பி* |
| *ஒவ்வொருவரும் பாவன்னிப்புக்கென்று* | *உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு ...* |
| *இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம்பெற்றுக் கொள்ளுங்கள்,* | *... குணப்படுங்கள்.* |
| *அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்."* | *கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலம் வரும்பொருட்டு, ..."* |

*இவ்விரு வசனப் பகுதிகளையும் பக்கம் பக்கம் வைத்துப் பார்க்கையில், பல இணைக் கருத்துக்கள் உடனடியாகத் தெளிவாகின்றன. முதலாவதாக, இரு வசனப் பகுதிகளிலும் "மனந்திரும்புங்கள்" என்ற கட்டளை உள்ளது. "மனந்திரும் புதல்" என்றால், நமது பாவத்தினிமித்தம் ஏற்பட்ட துக்கத்தி னால், பாவத்தைக் குறித்த நமது நடக்கையை நாம் மாற்றிக் கொண்டு, மாறுபட்ட வாழ்க்கையை நடத்தத் தீர்மானித்தல் என்று பொருள்படும். புதிய நூற்றாண்டு வசனப் பகுதியில், "ஆகவே நீங்கள் உங்கள் இருதயங்கள் மற்றும் வாழ்க்கை ஆகியவற்றை மாற்றிக்கொள்ளவேண்டும்"! என்றுள்ளது. பேதுரு, தமது உரையைக் கேட்டவர்கள் (முன்னரே) தேவனு டைய ஊழியக்காரரும், பரிசுத்தமும் நீதியும் நிறைந்தவரும், ஜீவாதிபதியுமாகிய இயேசுவைக் கொன்றிருந்தனர் என்பதை நிலைநாட்டினார்! முதலாவதாக, முக்கியமாக அவர்கள் இந்தப் பயங்கரமான பாவத்திலிருந்து மனந்திரும்பத் தேவையாய் இருந்தது!*

*அடுத்து இவ்விரு வசனப் பகுதிகளின் இரண்டாவது பிரிவைக் கவனியுங்கள். 3:20ல் "உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும்படி" என்ற சொற்றொடர் உள்ளது. பழங்காலத் தில் இருந்த எழுத்துப் பழக்கத்தில் இருந்து இவ்வுருவகம் பெறப்பட்டது. (ஆங்கிலத்தில்* blotted [NKJV] *மற்றும்* wiped [NASB] *என்றுள்ளது. எனவே அதின்படியான குறிப்பு பின்வருகின்றது). அந்நாட்களில் இருந்த மையில் இன்றைய நாட்கள்போல் அமிலம் கிடையாது எனவே எழுதப்பட்ட பாப்பிரஸை அது அரிப்பதில்லை. ஆகவே எழுதப்பட்ட எழுத்துக்கள் மேற்பரப்பிலேயே இருக்கும்; அவைகளை ஒரு கத்தியால் சுரண்டி அல்லது நனைந்த பஞ்சினால்[11] துடைத்து அழித்துவிட முடியும். ஒருவருடைய பாவத்தை "துடைப்பது" என்பது, அப்பாவங்களை தேவனுடைய நினைவுகூருதலின் புத்தகத்திலிருந்து எடுத்துப் போடுதல் என்பதாகும்! இது 2:38ல் கூறப்படுகிற "பாவ மன்னிப்புக்கு" சமமானதாகும்.*

*இவ்விரு வசனப்பகுதிகளிலும் முதல் மற்றும் இரண்டாவது விளக்கங்கள் ஒரே பொருள்படுவதால், மூன்று மற்றும் நான்காவது விளக்கங்களும் ஒரே பொருள்படுவதற்கு அதிக மான சாத்தியக்கூறு உள்ளது. ஒவ்வொரு வசன பகுதியிலும்*

மூன்றாவது விளக்கத்தைக் கவனியுங்கள். அப். 2:38ல் "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றுள்ளது. அதே வகையில் அப். 3:19, 20ல் எளிமையாக "திரும்புங்கள்"[12] என்ற கட்டளை உள்ளது. யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தபோது, தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் இருந்து அவர்களை விலக்கிக் கொண்டனர். இயேசுவை ஏற்றுக்கொள்வதால் மட்டுமே அவர்கள் கர்த்தரிடத்திற்குத் திரும்பமுடியும்.[13] குணப் படுங்கள் என்ற கட்டளையும், ஞானஸ்நானம் பெறுங்கள் என்ற கட்டளையும் இணையாக உள்ளதா? அவர்கள் "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே" ஞானஸ்நானம் பெற வேண்டி யிருந்தது. அவர்கள் பெறும் ஞானஸ்நானம், இயேசுவில் அவர்கள் கொண்ட விசுவாசத்தையும் அவரை மேசியா என்று அவர்கள் ஏற்றுக்கொண்டதையும் விளக்குகின்றது! இவ்விரு வசனப்பகுதிகளிலும் உள்ள இவ்விணைக் கருத்தானது, கர்த்தரி டத்தில் திரும்புவதற்கும், மனமாற்றத்திற்கும் (KJVயின் சொற்றொடரின்படி) ஞானஸ்நானம் மிக முக்கியமான பாகம் என்பது தெளிவாக்குகிறது.

நிறைவாக, ஒவ்வொரு வசனப்பகுதியிலும் நான்காவது விளக்கத்தை நோக்குவோம். அப். 2:38ல் "அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றுள்ளது, அதே வேளையில் அப். 3:19ல் "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும்" என்றுள்ளது. "இளைப்பாறுதலின் காலங்கள்" என்ற சொற்றொடரானது, கர்த்தர் தமது பிள்ளைகளின்மேல்[14] பொழிகின்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் குறிக்கின்றது, இந்த இளைப்பாறுதலின் ஆசீர்வாதங்கள் "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து வருகின் றன" (அதாவது, கர்த்தர் நம்மோடிருப்பதால்). அப். 2:38ன்படி, நாம் ஞானஸ்நானம் பெறும்போது, தேவன் தமது சொந்த ஆவியை நமக்குத் தருகிறார், அவரது ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார்! நாம் "ஆவியினால் நிறையப்படுகின் றோம்" (எபே. 5:18), நமது "ஆத்துமாக்கள் [ஆவிக்குரிய] இளைப்பாறுதலின் காலங்களை" அனுபவிக்கின்றன. யோவா. 7:37-39ல், பரிசுத்த ஆவியானவர், "ஜீவ தண்ணீருள்ள நதிகளுக்கு" ஒப்பிடப்படுகிறார்! சிலர் கிறிஸ்தவத்தைப்

பாரமானது என்று எண்ணுகின்றனர்; இது ஆசீர்வாதமானது என்று பேதுரு கூறினார்!

இவ்விரு வசனப்பகுதிகளையும் ஒன்றாக வைத்துப் பார்க்கையில், பின்வரும் மாபெரும் சத்தியங்களை நாம் பெறுகின்றோம்: நாம் தேவனிடத்தில் மனந்திரும்பிக் குணப் பட்டால் - இது ஞானஸ்நானம் பெறுவதையும் உள்ளடக்கு கின்றது - நமது பாவங்கள் மன்னிக்கப்படும் (நிவிர்த்தி செய்யப்படும்), தேவன் நமக்குள் வந்து தங்கி, நமது ஆத்துமாக் களை ஆசீர்வாதித்து இளைப்பாற்றுவார்! 3:19, 20ல், பேதுரு தமது உரையைக் கேட்டவர்கள், இயேசுவினிடத்தில் விரைவில் மனந்திரும்பும்படியாக, மிகவும் வசீகரிக்கத்தக்க ஆசீர்வாதங் களை அவர்களுக்குக் காட்டினார்!

## முன்பிருந்த நிலை வாக்குத்தத்தம் செய்யப்படுதல் (3:19ஆ-21)

நாம் இரண்டு ஆசீர்வாதங்களைக் கவனித்தோம்: நமது பாவ நிவிர்த்தி மற்றும் இளைப்பாறுதலின் காலங்கள்[15] என்பவைகளே அவைகள். வசனங்கள் 19ஆ மற்றும் 21ல் பேதுரு மூன்றாவது ஆசீர்வாதத்தைச் சேர்க்கின்றார்: "... முன்னே குறிக்கப்பட்ட[16] இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும் ... உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்." இயேசுவின் இரண்டாம் வருகையே பேதுரு குறிப்பிட்ட மூன்றாவது ஆசீர்வாதம் ஆகும்! நீங்களோ நானோ கர்த்தர் திரும்பி வருதல் குறித்து உணர்வடையாதிருக்கலாம், ஆனால் ஆதி கிறிஸ்தவர்கள் அந்நிகழ்ச்சிபற்றி மெய்சிலிர்த்தனர். அவர்களுடைய உபத்திரவங்களின் மத்தியில், கிறிஸ்து மறுபடி யும் வந்து, எல்லாவற்றையும் சரியாக்கும் நாளுக்காக அவர்கள் ஏங்கினர்!

"எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்" என்ற சொற் றொடர் குறித்து கணிசமான அளவு தவறான புரிந்து கொள்ளு தல் நிலவுகின்றது. KJVயில் இது "யாவற்றையும் ஈடு செய்யுங்

காலம் வரைக்கும்'' என்று வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. NIVயில் ''தேவன் எல்லா வற்றையும் முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவரும் காலம் வரும் வரைக்கும்" என்றுள்ளது. இவ்விடத்தில் பேதுரு என்ன பொருள்படுத்தினார் என்பதுபற்றி விரிவான உரைகள் பல தரப்பட்டுள்ளன. சிலர், மனிதகுலமானது தேவனிடத்திற்குத் திரும்பி, ஆவிக்குரிய ஒரு பொற்காலம் வரும்வரையில்[17] இயேசு மறுபடியும் திரும்பி வரமாட்டார் என்று அறிவிக்கின்றனர். மற்றவர்கள், இயேசு மறுபடியும் வருகையில், இவ்வுலகத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து, இதை ஒரு பரதீசாக்கு வார்[18] என்கின்றனர். இருப்பினும், பேதுரு எதிர்காலம்பற்றி திகைப்பூட்டும் ஒரு புதிய வெளிப்படுத்துதலைத் தரவில்லை; ''எல்லாம் நிறைவேறித்தீருதல்'' என்று அவர் கூறும்போது, அவருடைய நாட்களில் பொதுவழக்கில் இருந்த யூத மரபுச் சொல்லைப் பயன்படுத்தினார்.

பேதுருவின் உரையைக் கேட்ட யூதர்களுக்கு,[19] "எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்'' என்பது மேசியாவுக்குரிய வழக்குச் சொல்லாக இருந்தது. மேசியா வரும்போது அவர் எல்லாவற்றையும் சரியாக்குவார். பேதுருவின் உரையைக் கேட்டவர்கள் நிறைவேறித் தீருதல் என்பதன் பொருளைச் சரியாகப் புரிந்து கொண்டனர் என்று இதற்கு நாம் விளக்கம் கூற முடியாது - "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்'' என்று கேட்ட அப்போஸ்தலர்களைப் போலவே (1:6) அவர்களும் தங்கள் மனதில் உலகப்பிரகாரமான, மாம்சத்திற்குரிய, அவர்களின் தேசத்தின் முன்பிருந்த நிலையைக் கொண்டுவருதலையே கொண்டிருந்தனர். தாவீது மற்றும் சாலமோன் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் இஸ்ரவேல் தேசத்திற்கு இருந்த மகிமையும் பெருமையும் மறுபடி கொண்டுவரப்படும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய தவறான கருத்துக்களை[20] திருத்துவது பேதுருவின் நோக்கமன்று, மாறாக அவர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொண்டால், அவர் திரும்ப வரும்போது மேசியாபற்றிய எல்லா சட்டப்பூர்வ நம்பிக்கைகளும் கனவுகளும்[21] முழுமையாகவும் நிறைவாகவும் உணரப்படும்[22] என்பதை அவர்கள் அறியவேண்டும் என்று

*விரும்பினார்! மேசியாவைத் தங்கள் வாழ்வு முழுவதற்கும் மையமாகக் கொண்டிருந்தவர்களுக்கு இது ஒரு வல்லமையான ஊக்குவித்தலாய் இருந்திருக்கும்.*

*வசனம் 20 மற்றும் 21ல், பேதுரு தம் உரையைக் கேட்ட யூதர்களுக்குக் கூறிய வார்த்தைகளின் சிறப்புப் பொருள் இதுவேயாகும். வேதாகமத்தின் போதனை முழுமையும் பெற்றுள்ள கிறிஸ்தவர்களுக்கு இந்த வார்த்தைகள் தரும் பொருள் என்ன? பேதுருவின் வார்த்தைகள் ஒரு அடிப்படை சத்தியத்தை வலியுறுத்துகின்றன - கிறிஸ்து மறுபடி வரும்வரை எல்லாம் நிறைவேறித் தீராது. சில விஷயங்கள் இப்பொழுது நிறைவேறியுள்ளன - தேவன் நமது பாவங்களை மன்னித்துள் ளார்; வாழ்க்கையின் சோதனைகளில் நமக்கு உதவி செய்ய நம்மோடு அவர் இருக்கிறார் - ஆனால் எல்லாம் நிறைவேறித் தீரவில்லை. பாவத்தால் அழிகின்ற ஒரு உலகத்தில் நாம் வாழ்கின்றோம். அநேக வேளைகளில் துன்மார்க்கர் செழித்து வளர, நீதிமான்கள் உபத்திரவப்படுகின்றனர். அக்கிரமங்கள் இப்பொழுது இருக்கின்றன, கர்த்தரின் மறுவருகை வரைக்கும் இவை இருக்கும். புதிய நூற்றாண்டு வசன நடையின் சொற் றொடரின்படி, "மறுபடியும் எல்லாம் நேராக்கப்படும்."*[23]

*"எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்" என்ற சொற்றொட ரைப் புரிந்துகொள்ள, ஆதியாகமத்தின் முதல் சில அதிகாரங் களை, வெளிப்படுத்தின விசேஷத்தில் கடைசி இரு அதிகாரங் களில் பரலோகத்தைப்பற்றிய சித்தரிப்புடன் ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு சிறந்த வழியாகும். ஆதியாகமத்தில், பாவம் மனிதனைத் தனது சிருஷ்டிகரிடமிருந்து பிரித்த வேளை வரும் வரையில், அவன் தேவனோடு நடந்திருந்தான்; வெளி. 21:3ல் அந்த நெருங்கிய உறவு முன்பிருந்த நிலைக்குப் பழைய படி கொண்டுவரப்படுகிறது. ஆதியாகமத்தில் மனிதன் ஜீவ விருட்சத்தை நெருங்குவதற்குத் தடை செய்யப்பட்டான்: வெளி. 22:2ல் ஜீவ விருட்சத்தில் மனிதனின் பங்கு பழைய நிலைக்குத் திரும்பியது; ஆதியாகமத்தில் பரதீசு இழக்கப் பட்டது; வெளி. 22:1, 2ல் பரதீசு மறுபடியும் பெறப்பட்டது. ஆதியாகமத்தில், உலகத்தை அழிக்க மரணம் உண்டாயிற்று; வெளி. 21:4ல் மரணம் ஒழிக்கப்பட்டது. முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவரத் தகுதியானவைகள்*[24] *ஒவ்வொன்றும், இயேசு*

*தமக்குச் சொந்தமானவர்களை பெற்றுக்கொள்ள மறுபடியும் வரும் நாளிலே (யோவா. 14:3) உண்மையுள்ளவர்களுக்கு[25] முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வரப்படும்! கர்த்தருடைய மறுவருகைக்கு எப்பொழுதும் தயாராயிருப்பதற்கு இவைகள் எவ்வளவு பலமான ஊக்குவிப்பாய் உள்ளன!*

## *முன்னுரைக்கப்பட்ட ஒரு இரட்சகர் (3:22-24)*

*தீர்க்கதரிசிகளைப்பற்றிப் பேதுரு பல முறைகள் (வ. 18, 21) குறிப்பிட்டிருந்தார். அடுத்து அவர், மேசியாவைப்பற்றிப் பேசிய அநேக தீர்க்கதரிசிகளை, மோசே[26] தொடங்கி ஒவ்வொருவராகப் பட்டியலிட்டார்:*

> *மோசே பிதாக்களை நோக்கி: "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற் கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" என்றான் (வ. 22, 23).*

*உபாகமம் 18 மற்றும் லேவியராகமம் 23[27] ஆகியவற்றில் உள்ள இந்த வார்த்தைகள், பேதுருவின் உரையைக் கேட்டவர் களுக்கு மிகவும் அறிமுகமானவைகளே. மோசேயைப் போலவே ஒரு தலைவராக, பிரமாணம் கொடுப்பவராக, ஆள்பவராக, ஒரு இரட்சகராக[28] - "தீர்க்கதரிசி" வருவார் என்று யூதர்கள் எதிர்பார்த்திருந்தனர். யோவான்ஸ்நானன் வந்த போது, அவர்கள் "நீர் தீர்க்கதரிசியானவரா?" என்று கேட்டனர் (யோவா. 1:21). ஐயாயிரம் பேருக்கு உணவளிக்கும் போது இயேசுவைப் பார்த்தவர்கள், "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" என்றார்கள் (யோவா. 6:14). பேதுரு, இயேசுவை அந்த தீர்க்கதரிசி என்று வலியுறுத்தியிருக்க வேண்டும், பிறகு "அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெ வனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" என்ற வார்த்தைகளைக் கூறியிருக்க வேண்டும். இயேசுவை*

அவர்கள் வினயமாய்க் கவனிக்கவில்லையென்றால் அவர்கள் அழிக்கப்படுவார்கள்!

அடுத்ததாக, இரட்சகரைப்பற்றிய மற்ற தீர்க்கதரிசிகளின் போதனையைப் பேதுரு விரைவான ஆய்வு செய்தார்: "சாமுவேல் முதற்கொண்டு, எத்தனை பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்களோ, அத்தனை பேரும் இந்த நாட்களை முன்னறி வித்தார்கள்" (வ. 24). தாவீதுக்கு அபிஷேகம் செய்வித்து அவரது இராஜ்யம் (1 சாமு. 13:14; 15:28; 16:13; 28:17) நிலைநாட்டப் படுதல்பற்றிச் சாமுவேல் (வாய்மொழித் தீர்க்கதரிசிகளில் முதலானவராக 13:20ல் காண்க) பேசிய போது, அந்த தீர்க்க தரிசியின் வார்த்தைகள், தேவன் தாவீதுடன் 2 சாமுவேல் 7:8-17ல் ஏற்படுத்திய மேசியாவைப்பற்றிய உடன்படிக்கையை முன் எதிர்நோக்கியதாயிருந்தது. சாமுவேலுக்குப் "பின்வந்தவர் கள்" பற்றி, பேதுரு எடுத்துக்காட்டுக்குமேல் எடுத்துக்காட்டாக அநேகம் சுட்டிக்காட்டியிருக்க முடியும்.[29] பழைய ஏற்பாட்டில் முன்னூற்றுக்கும் மேற்பட்ட தீர்க்கதரிசனங்கள் இயேசுவைப் பற்றிப் பேசுகின்றன.

## வெளிப்படுத்துதல் தடைப்பட்டது (3:25, 26)

இவ்வேளையில், சப்பாணியாயிருந்த மனிதன் குணமாக் கப்பட்டதும், அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளும் யூத அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டன, அவர்களும் உடனே பேதுருவின் பிரசங்கத்தை நிறுத்துவதற்காகப் புறஜாதியாரின் முற்றத்தை நோக்கி விரைந்து வந்தனர். இன்னும் சில வினாடி களே பேதுரு பிரசங்கிக்கவிருந்தார். பேதுரு தமது நிறைவு வார்த்தைகளில், தம் உரையைக் கேட்டவர்களுக்கு ஒரு தனிப் பட்ட வேண்டுகோள் விடுவித்தார். வசனங்கள் 25 மற்றும் 26ல் பேதுரு, "நீங்கள்" அல்லது "உங்களுடைய" என்ற முன்னிலைப் பெயர்ச் சொல்லைக் குறைந்தது ஆறுமுறை பயன்படுத்தினார். இந்த வசனப்பகுதியின் உணர்வைப் பெறுவதற்கு, "நீங்கள்" மற்றும் "உங்களுடைய" என்ற வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்து, இவைகளை உரக்க வாசிக்கவும்.

''நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்

*கிறீர்கள்" என்று பேதுரு ஆரம்பித்தார். பழைய ஏற்பாட்டில், "தீர்க்கதரிசிகளின் புத்திரர்" என்ற சொற்றொடர், தீர்க்கதரிசிகளின் பள்ளிகளில், தீர்க்கதரிசியாகும்படி பயிற்சி பெறும் மனிதர்களைக் குறித்தது. ஆயினும், பேதுரு தமது உரையைக் கேட்டவர்களுக்கு, அவர்கள் இத்தீர்க்கதரிசிகளின் ஆவிக்குரிய சுதந்திரர் என்ற வகையிலும், சரீர வகையிலும் சட்டபூர்வமாகவும் புத்திரர்கள் என்ற வகையிலும் பயன்படுத்தினார். தேவனுக்காகப் பேசியவர்கள், மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை யூதர்களுக்கென்றே எழுதினர். நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் இயேசுவின் மேல் ஒளிவெள்ளம் போலப் பாய்ந்திருந்தும் - யூதர்களால் அவரை இன்னும் காண முடியாமல் இருந்தது!*

*பிறகு பேதுரு, யூதர்களுக்கு அருளப்பட்ட இன்னொரு ஈவான, நீண்ட காலத்துக்கு முந்திய உடன்படிக்கையை அவர்களுக்கு நினைப்பூட்டினார்: "... உன் சந்ததியினாலே பூமியிலுள்ள[30] வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்'' (வ. 25). இங்கு மேற்கோள் காட்டப்பட்ட வாக்குத்தத்தம் ஆதியாகமம் 22:18ல் காணப்படுகிறது; அது இயேசுவின் வருகையைக் குறித்தது. பின்னாளில் பவுலும் கூட, "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே" (கலா. 3:16) என்று குறிப்பிடும்போது ஆதியாகமம் 22ஐயே மேற்கோள் காட்டினார். பேதுருவின் உரையைக் கேட்டவர்கள், ஆதியாகமம் 22ன் வாக்குத்தத்தத்தை அறியாதவர்கள் அல்ல. மேசியா வந்தபோது அவர்கள் அவரை அடையாளம் கண்டிருக்க வேண்டும், ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.*

*யூதர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகளைத் தள்ளிவிட்டு, தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் புறக்கணித்தனர். தேவன் அவர்களைக் கைவிடுவதற்கு எவ்விதத்திலும் உரிமையுள்ளவராயிருந்தார், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. தேவன் கிருபையுள்ளவரென்றும், தமது உடன்படிக்கையின் மக்க*

ளுக்கு அனைத்தையும் அவர் செய்திருந்தார் என்றும், யூதர் களுக்கு இரண்டாவது வாய்ப்பை அளித்தார் என்றும் பேதுரு அறிவித்தார்: "அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங் குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான்" (வ. 26). "முதலாவது" என்ற வார்த்தை. தேவனுடைய ஆசீர்வாதங் களுக்குப்[31] புறஜாதியாரும் உட்படுத்தப்படுவார்கள் என்ற குறிப்பை அடக்கியுள்ளது, ஆனால் இந்த வசனப்பகுதியில், உயிர்த்தெழுதலை யூதர்களுக்கு ஆசீர்வாதமாக்க தேவன் விரும் பினார் என்பதும், யூதர்கள் தங்கள் துன்மார்க்கத்தைவிட்டு திரும்பவே இயேசு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார் என்ப துமே வலியுறுத்தப்படுகின்றன. "உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி" என்பதில் உள்ள தனிப்பட்ட வலியுறுத்தலைக் கவனியுங்கள். தனிப்பட்ட நபர்கள் முன்னி ருந்த நிலைக்குத் திரும்புவதைப் பொறுத்தே[32] நாட்டளவிலான மீட்டமைப்பு அமைந்தது.

பேதுருவுக்கு, வசனம் 20ல் உள்ள வேண்டுகோளை மறுபடி கூறுவதற்கேற்ற இடம் இதுவாகவே இருந்திருக்க வேண்டும்- அவர்களுக்குத் தேவையான விபரங்களைக் கூடக்கொடுத்து- "இன்னும் அநேக வார்த்தைகளாலே" (2:40) அவர்களுக்குப் புத்தி சொல்லி, இயேசுவுக்குக் கீழ்ப்படிதலை நம்பப் பண்ணியிருக்கலாம். ஆயினும், "அவர்கள் ஜனங்களுடனே பேசிக்கொண்டிருக்கையில் ஆசாரியர்களும், தேவாலயத்துச் சேனைத் தலைவனும், சதுசேயரும் அவர்களிடத்தில் வந்து. ... அவர்களைப்பிடித்து காவலில் வைத்தார்கள்" (4:1-3) என்பதால் அந்த வாய்ப்பு அவர்களுக்குத் தரப்படவில்லை.

யூதத் தலைவர்கள் அப்போஸ்தலர்களைச் சிறைப் பிடித் திருக்கலாம், ஆனால் அவர்களின் வார்த்தைகளைச் சிறைப் பிடிக்க முடியவில்லை. அடுத்த வசனம், "வசனத்தைக் கேட்ட வர்களில் அநேகர் விசுவாசித்தார்கள். அவர்களின் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது" என்று நமக்குக் கூறுகின்றது! (4:4). அந்த ஐயாயிரம் பேரில் முன்னாள் பிச்சைக்காரனும் - சரீரத்தில் மட்டுமல்ல ஆவியிலும் குணம் பெற்றவனாக- இருந்திருப்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது!

## முடிவுரை

நமது அடுத்த பாடத்தில், பேதுருவும் யோவானும் சனெதரீன் சபையின் முன்னதாக நிற்கையில் "இயேசுவின் நாமம்" வலியுறுத்தப்படுவதை நாம் தொடர்ந்து காண்போம். ஆயினும் இப்போது நாம் முடிக்க வேண்டியுள்ளது. மூன்றாம் அதிகாரத்தின் தொடக்கத்தில் பிச்சைக்காரனைக் குணமாக்கின போது பேதுருவும் யோவானும் என்ன செய்தனர் என்பதையும், இவ்வதிகாரத்தின் கடைசியில் அவர்கள் பிரசங்கித்தபோது[33] என்ன செய்ய முயற்சித்தனர் என்பதையும் இணையாகப் பார்ப்போம். இவ்விரண்டிற்கும் உள்ள தொடர்பு அதிகாரம் 4ல் பேதுரு, பிறவிச் சப்பாணியைப்பற்றிப் பேசும்போது வலியுறுத்தப்படுகிறது:

> பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானான் என்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக்கேட்டால், உங்களால் சிலுவையிலறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேய னாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது ... அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் (4:9, 10, 12).

தமிழ் அல்லது ஆங்கில மொழியாக்கத்தில் இதை நாம் அறிய முடியாது, ஆனால் வசனம் 9ல் "ஆரோக்கியமானான்" என்ற வார்த்தையும் வசனம் 12ல் "இரட்சிக்கப்படும்படி" என்ற வார்த்தையும் ஒரே அடிப்படை வார்த்தையிலிருந்து வந்தவை யாகும். அந்தச் சப்பாணியை சரீரரீதியாகக் குணமாக்கின அதே இயேசு, அவர்களை ஆவிக்குரிய முறையில் குணமாக்க முடியும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று பேதுரு விரும்பினார்! வேறு வகையில் கூறுவதென்றால், சப்பாணியை சரீர சுகவீனத்திலிருந்து இரட்சித்த இயேசு அவர்களது ஆவிக்குரிய சுகவீனத்திலிருந்தும் அவர்களை இரட்சிக்க

முடியும். இந்த யூதர்கள் தினமும் அந்த சப்பாணியான மனிதனைக் கடந்துசெல்லும்போதெல்லாம், அவனுடைய பின்னிப்போன கால்களைப் பார்த்துப் பரிதாபப் பட்டிருப் பார்கள்; அவர்களுடைய ஆத்துமாக்கள் பின்னிப் போயிருப் பதை, ஊனமுற்றிருப்பதை, கலங்கியிருப்பதை, அந்தப் பிச்சைக்காரனின் கால்கள் போன்றே வலிவற்று இருப்பதை அவர்கள் உணரவேண்டும் என்று பேதுரு விரும்பினார்! வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஒரு மனிதன் பெற்ற சரீர சுகமானது அநேக மனிதர்கள் ஆத்தும சுகம்பெற வழி வகுத்தது. இதுவரை கர்த்தர் உங்கள் ஆத்துமாவைச் சுகப்படுத்த நீங்கள் அனுமதியாமல் இருந்தால், இப்போதே அதற்கான நேரம் ஆகும்!

## காட்சி-உதவிக் குறிப்புகள்

*2:38 மற்றும் 3:19 இவற்றிற்கிடையேயான இணைவுகள் ஒரு கரும்பலகை அல்லது வரைபடத்தில் வைக்கப்படலாம். "பாவ நிவிர்த்தி (பாவத்தைத் துடைத்தல்)" என்பது, "பாவம்" என்ற வார்த்தையை கரும்பலகையில் எழுதி அதை அழிப்பதின் மூலம் விளக்கப்பட முடியும். (பாவத்தைத் துடைத்தல் என்பது, விளக்கப்பட வேறு வழி ஒன்றும் உள்ளது: ஈரக் களி மண் துண்டு ஒன்றைச் செய்து அதில் சில கீறல்கள் போட்டுப் பின் அக்கீறல்களை அழிக்கலாம். இதற்கு வேறொரு உற்சாகமான வழி, பிள்ளைகளின் மாய எழுத்துப் பலகையைப் பயன் படுத்துவதாகும். நீங்கள் இருக்கும் இடத்தில் அதை வாங்க முடிந்தால் நீங்கள் பயன்படுத்தலாம். எழுதுகோலினால் அதில் "பாவம்" என்றெழுதுங்கள், பின்பு முன் தாளைத் தூக்கினால் எழுதியது அழிக்கப்பட்டிருக்கும்.)*

## பிரசங்கக் குறிப்புகள்

*அப். 2 மற்றும் 3ல் உள்ள பிரசங்கங்களைத் தவிர்த்து மற்ற பாகங்களுக்கான சுருக்கமான பிரசங்க அமைப்புகள் நம்மிடம்*

உள்ளன. இவ்விரு பிரசங்கங்களின் குறிப்புகளும் அவைகள் பிரசங்கிக்கப்படும்போது காணப்படலாம். (பொதுவாக லூக்கா ஒரு செய்தியை இரண்டாம் முறை தருவதில்லை; நூலின் பிற்பகுதியில் தரப்போகிற கருத்துக்களை அவர் வைத்து வைப்பது வழக்கம்.) "பேதுரு பிரசங்கித்த சுவிசேஷம்" என்ற தலைப்பில் அப். 2 மற்றும் 3 - ஒருவேளை அப். 4 மற்றும் 10ஐயும் சேர்க்கலாம் - ஆகியவற்றில் உள்ள பிரசங்கங்களை இணைத்து ஒரு பாடம் தயார் செய்யப்படலாம். ஆனால் குறைந்த அளவு விளக்கவுரைகள் - தேவையான அளவு மட்டும் சுருக்கமான விளக்கவுரைக் குறிப்புகள் - தரப்பட வேண்டும். அது பேதுரு பிரசங்கித்ததைப் போலவே வல்லமையுள்ள பாடமாய் (உங்கள் மூலம்) அச்செய்தி ஆயிரக்கணக்கானவர்களை அசைக்க வேண்டும்!

"மோசேயைப் போல் ஒரு தீர்க்கதரிசி" (உபா. 18:15, 18, 19; லேவி. 23:29; அப். 3:22, 23) என்ற தலைப்பில் ஒரு உற்சாகமான பிரசங்கம் பிரசங்கிக்கப்படலாம். எபிரெயர் நிருபத்திற்கான தமது விளக்கவுரையில், காஃப்மன் அவர்கள் இயேசு, மோசேயைப் போலிருந்த பத்தொன்பது வகைகளையும், இயேசு, மோசேயைப் போலிராத பதிமூன்று வகைகளையும் பட்டியலிட்டுள்ளார் (காஃப்மன், *Commentary on Hebrews* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971], 67-69).

---

குறிப்புகள்

[1]அப். 2 மற்றும் 3ல் உள்ள பிரசங்கங்கள் ஒன்றிற்கொன்று துணைக் கருத்தளிப்பவைகளாக எண்ணப்படல் வேண்டும். பேதுரு இவ்விரு பிரசங்கங்களிலும் ஒரே விஷயத்தைப் பயன்படுத்தியிருப்பார், ஆனால் லூக்கா தாம் ஒருமுறை பதிவு செய்யும் விஷயத்தை மறுமுறை பதிவு செய்வது வழக்கமில்லை. [2]KJVயில் "பரிசுத்தத்தினால்" என்றுள்ளது; NIVயில் "பக்தியினால்" என்றுள்ளது. [3]இது *pais* என்ற வார்த்தையாகும், இது "ஊழியக்காரன்" என்றோ அல்லது "பிள்ளை" என்றோ பொருள்படக் கூடும் (இவ்வார்த்தையிலிருந்து தான் நாம் "pediatrician" குழந்தைகளுக்கான மருத்துவர் என்ற வார்த்தையைப் பெறுகிறோம்). இயேசுவின் பாடுகளைப் பேதுரு வலியுறுத்தியதால் (வசனம் 18ஐக் கவனியுங்கள்), அவர் நிச்சயமாகவே பாடுபடும் ஊழியன்பற்றிய பழைய ஏற்பாட்டு உபதேசங் களைப் பிரதிபலித்திருக்கக் கூடும். செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் பாடுபடும் ஊழியன் என்ற பாடத்தை விளக்கும் ஏசாயா இன்னும் மற்ற

வசனப்பகுதிகளில் pais என்ற வார்த்தையே பயன்பட்டுள்ளது, இவ்விதமாகப் பல நவீன மொழிபெயர்ப்புகளும் "ஊழியன்" என்ற வார்த்தையையே தெரிவு செய்கின்றன. [4]சங். 22. நமக்குப் பேதுருவின் பிரசங்கம் சுருக்கமான முறையில் தரப்பட்டுள்ளதால், இவ்விடத்தில் அவர் நிறுத்தி, ஏசாயா மற்றும் தாவீது போன்றோரின் மாபெரும் வசனப் பகுதிகளிலிருந்து சிலவற்றை மேற்கோள் காட்டியிருக்கச் சாத்தியக் கூறு உண்டு. [5]அவர்கள் விடுதலை அளிப்பவரைக் கையளித்தார்கள்! [6]"பரிசுத்தம்" என்பது "sanctified" என்பதற்குரிய அதே கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது; "பிரித்து வைக்கப்பட்டது" என்பதே இதன் பொருளாகும். மனிதர்களுக்கு இதைப் பயன்படுத்துகையில், தேவன் தமது பிள்ளைகளைத் தமது சிறப்பான நோக்கத்திற்காகப் பிரித்து வைத்துள்ளார் என்று பொருள்படும். தேவனுக்கு இதைப் பயன்படுத்தும்போது, தேவனுடைய பூரணத்துவமானது அனைத்து படைப்பினின்றும் அவரைத் தனியே பிரித்து வைத்துள்ளது என்று பொருள்படும். [7]"நீதியுள்ளவர்" என்றால், குற்றம் சுமத்தப்பட முடியாதவர், குற்றம் சாட்டப்பட முடியாதவர் என்று பொருள்படும். [8]யோவான் 6:69ல் பேதுரு, இயேசுவை "தேவனுடைய பரிசுத்தர்" என்றும் அழைத்தார். [9]இதுவே பேதுருவின் முதல் பிரசங்கத்திற்குத் திறவுகோல் கருத்தாக இருந்தது, சிலுவையானது, யூதர்களுக்குப் பெரிய இடறுதலாய் இருந்து, இயேசுவை மேசியா என அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தடையாய் இருந்ததால் அவர் இதைப் பிரதான கருத்தாக எடுத்துக் கொண்டார். [10]சில எழுத்தாளர்கள், அப்படிச் செய்யத் தேவையில்லை என்று குறிப்பிடுகின்றனர். ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளில் இருந்தே, மக்கள் கிறிஸ்துவை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றதை எருசலேமிலிருந்த யூதர்கள், பார்த்திருந்தனர் (2:38, 41, 47).

[11]மக்கள் களிமண் அல்லது மெழுகு பலகைகளின் மேல், கூர்முனைக் குச்சிகளால் எழுதினர். மேற்பரப்பை சமமாக்கினால் இந்த எழுத்துக்கள் துடைக்கப்பட்டு விடும். [12]KJVயில் "மனந்திரும்பி" என்றுள்ளது, ஆங்கிலத்தில் "be converted" என்றுள்ளது. இது ஒரு கட்டளையாயிருந்த போதிலும், சிலர் இது "be" என்ற வினைச் சொல்லை உள்ளடக்கியுள்ளதால் "இது ஒரு செயல்பாட்டு வினையாகும், ஆகவே இதில் நாம் செய்வதற்கொன்றுமில்லை, தேவன் நமக்கு செய்யும் செயலாகும். நாம் அமர்ந்திருக்க தேவனே அனைத்தையும் செய்வார்" என்கின்றனர். "Be converted" என்பதைக் காட்டிலும் "return" என்பது சிறந்த மொழிபெயர்ப்பாகும், ஏனெனில் இதில் தவறான விளக்கத்திற்கு வாய்ப்பில்லை. கிரேக்க பாஷையில் இவ்விடத்தில் "திரும்புங்கள்" என்ற பொருளுடைய வார்த்தையே பயன்பட்டுள்ளது. [13]மூலபாஷையில் அவர்கள் எவ்விடத்திற்கு அல்லது யாரிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று கூறப்படவில்லை, ஆனால் அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டும் (11:21ஐக் கவனிக்கவும்) என்பது தெளிவு. புதிய நூற்றாண்டு மொழிபெயர்ப்பில் 3:19 "தேவனிடத்தில் திரும்பி வாருங்கள்" என்ற கட்டளையைக் கொண்டுள்ளது. [14]இது பாவங்களுக்கு மன்னிப்பைக் கொண்டு தொடங்கும். நமது ஆத்துமாவை காயப்படுத்தும் பயங்கரமான குற்ற உணர்விலிருந்து விடுபடுவது "இளைப்பாறுதலின் காலம்" என்ற அற்புதமான காலம் ஆகும். இந்த "இளைப்பாறுதலின் காலங்கள்" நமது கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் தொடரு

கின்றது. நாம் நமது பிரச்சனைகளினால் உபத்திரவம் அடையும்போது, நிறைவாக அது கர்த்தரிடத்தில் திருப்பப்படும் போது, நமது ஆத்துமா எவ்வளவாய் இளைப்பாறுதல் அடைகிறது! நீங்கள் இப்பாடத்தை வகுப்பில் நடத்தினால், வகுப்பில் உள்ளவர்கள் எப்பொழுது கர்த்தரால் "இளைப்பாறுதல்" பெற்றுக்கொண்டனர் என்று பகிர்ந்து கொள்ளச் செய்வது நலம். [15]இவ்விதமாகவே KJVயில் இந்த இரு ஆசீர்வாதங்களும் குறிப்பிடப்படுகிறது. [16]"குறிக்கப்பட்ட" என்ற வார்த்தை "முன் குறிக்கப் பட்ட" என்ற பொருளுடைய கிரேக்க கூட்டு வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. தொலை தூர கடந்த காலத்தில், தமது திட்டங்கள் மற்றும் நோக்கங்களின் ஒரு பகுதியாக தேவன், இயேசுவை மேசியாவாக "குறித்திருந்தார்." "உங்களிடத்தில்" என்பது ஒரு தனிப்பட்ட செயல் பாடாகும். பேதுரு தம் உரையைக் கேட்டவர்களிடம் இதைத் தேவன் அவர்களுக்கென்றே விசேஷமாகச் செய்ததாகக் கூறுகிறார். [17]இப்பாவம் நிறைந்த உலகில் ஆவிக்குரிய "பொற்காலம்" ஏற்படுமென்ற குறிப்பு எங்கும் காணப்படுவதில்லை. உண்மையில் இயேசு, தாம் மறுபடியும் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ என்று வியப்படைந்தார் (லூக். 18:8). [18]இப்பகுதியை மாறுபாடாகப் போதிப்பவர்கள் இதில் உள்ள உருவகத்தை நேரடியாகப் பொருள் கொள்கின்றனர். [19]வேத வசன விளக்கத்திற்கான ஒரு அடிப்படை வினா: "முதன் முதல் இவ்வார்த்தையைக் கேட்டவர்களுக்கு இது என்ன பொருள் தந்தது?" என்பதாகும். [20]அவர்கள் கிறிஸ்தவர்களான பிறகு, தொடர்ந்து கேட்டல் மற்றும் கற்றலில் இருந்ததால், அவர்களின் தவறான கருத்துக்கள் சரி செய்யப்பட்டிருக்கும் - இராஜ்யத்தைப்பற்றிய அப்போஸ்தலர்களின் தவறான கருத்துக்களும் திருத்தப்பட்டிருக்கும்.

[21]"சட்டப்பூர்வ" என்ற தகுதிப்படுத்தும் வார்த்தையை நான் பயன்படுத்தியுள்ளேன், ஏனெனில் மேசியாவைப்பற்றிய அவர்களின் எல்லா நம்பிக்கைகளும் மற்றும் கனவுகளும் உணரபட்டிருக்காது. மேசியாவைப்பற்றி தீர்க்கதரிசிகள் கூறியவற்றிற்கு அவர்கள் தங்கள் சொந்தக் கற்பனை வண்ணம் தீட்டியிருந்த அநேக நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் நிறைய இருந்தன. "நிறைவேறித் தீரும் காலம்" என்று பேதுரு கூறியபோது, "தேவன் (உண்மையில்) பரிசுத்த தீர்க்கதரிசிகள் வழியாகப் பேசியவைகளை" மட்டுமே வரையறைப் படுத்தினார். [22]பேதுரு ஒரு நாட்டளவான நம்பிக்கையை அவர்களின் தனிப்பட்ட நம்பிக்கையாகத் திருப்பினார். [23]"நிறைவேறித் தீருங்காலங்கள்" மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்திய யோவான் ஸ்நானனின் ஊழியத்தில் இருந்து தொடங்கிற்று (மல்கி. 3:1; 4:5, 6; மத். 17:11, 12; மாற். 9:12, 13ஐக் கவனியுங்கள்) "திரும்பக் கொண்டு வருதல்" இயேசு கிறிஸ்துவின் பலியினால் (எபே. 2:16-18) ஆண்களும், பெண்களும் கர்த்தரிடத்தில் திரும்பச் சேர்ப்பதில் தொடருகின்றது. நிறைவான திரும்பக் கொண்டு வருதலுக்கு எப்படியும் நாம், கர்த்தரின் வருகைமட்டும் காத்திருக்க வேண்டும். [24]இப்போது நாம் அக்கறை காட்டும் பெரும்பாலான செயல்பாடுகள் யாவும் திரும்பக் கொண்டுவருதல் என்று அழைக்கப்படத் தகுதியற்றவைகளாகும். ஒரு நாளில் இவையாவும் நித்திய திட்டத்திற்கு முக்கியமானவைகள் அல்ல என்று நாம் காண்போம். [25]இதை உங்களுக்குச் சொந்தமாக்குங்கள்: சிலர் ஆரோக்கியக் குறைவடைகின்றனர்; இது மறுபடியும் பழைய நிலைக்கு கொண்டு வரப்படும். சிலர் தங்கள்

உலகப் பொருட்களை இழக்கின்றனர்; அவர்கள் பரலோகத்தில் பொக்கிஷங்களைப் பெறுவார்கள். சிலர் நண்பர்களையும், அன்புக்குரியவர் களையும் இழக்கின்றனர்; அவர்கள் பரலோகத்தில் தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், தூதர்கள் மற்றும் பரிசுத்தவான்களுடன் இருப்பார் கள். [26]யூதா 14, 15ல் ஏனோக்கு தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறார், ஆனால் யூதர்கள் பொதுவாக மோசேயையே முதலாவது மற்றும் மாபெரும் தீர்க்கதரிசி என்று எண்ணினார்கள். எம்மாவுக்குச் செல்லும் சாலையில் இயேசு இருவருக்குப் போதிக்கையில் அவரும் கூட, "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும்" (லூக். 24:27) என்று தான் தொடங்கினார். [27]பெரும் பாலான மேற்கோள்கள், உபாகமம் 18:15, 18 மற்றும் 19ல் இருந்து எடுக்கப் பட்டுள்ளது, ஆனால் இம்மேற்கோளின் முடிவில் வரும் சொற்றொடர் லேவியராகமம் 23:29ல் இருந்து வருகின்றது. லேவியராகமம் மற்றும் உபாகமம் ஆகிய இரண்டு நூல்களையுமே மோசேதான் எழுதினார். [28]உபாகமம் 18ல் மோசே, கானானியர்களைப் போல தேவனுடைய சித்தத்தை அறிந்தகொள்ள, மந்திர வித்தைகளின் பக்கம் திரும்பவேண்டாம் என்று மக்களிடம் கூறினார். மாறாக தேவன் தமது சித்தத்தை எப்பொழுதும் தமது பிரதிநிதிகள் மூலம் வெளிப்படுத்துகிறார்; அவர், "... ஒரு தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவார்" அதன் மூலம் மோசேயை அவர் எழுப்பினதை மக்களுக்குப் போதிப்பார். தேவன் தமது வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொண்டார்; ஏவுதல் பெற்ற பேசுபவரின்றி எப்போதும் அவர் மக்களைத் தவிக்க விட்டதில்லை. மோசே ஒரு தலைசிறந்த நபராக இருந்தார், ஆயினும், இடைக்கால தீர்க்கதரிசிகள் மோசேக்குரிய வாக்குத்தத்தங்களில் ஒரு பகுதியையே நிறைவேற்றியதாக இஸ்ரவேலர்கள் உணர்ந்தனர். இவ்விதமாக "தீர்க்கதரிசியானவர்" இனி வரவேண்டியவர் என்று அவர்கள் நம்பினர். [29]பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவருடைய வார்த்தைகளிலும் மேசியாவைப்பற்றிய குறிப்பிடத் தக்க குறிப்புகள் காண முடிவதில்லையென்று சிலர் கவலைப் படுகின்றனர். இது தேவையற்றது. ஒவ்வொரு தீர்க்கதரிசியும் வரப்போகிற மேசியா வைப்பற்றித் தமக்கே உரிய வகையில் எழுதியுள்ளனர். இவ்விதமாக இயேசு "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்களெல்லா வற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்" (லூக். 24:27). [30]இது கிறிஸ்துவின் யுகத்தில் புறஜாதியாரும் சேர்த்துக் கொள்ளப்படுவதைக் குறிக்கும் மற்றொரு மாபெரும் பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தம் ஆகும். ஆயினும், பேதுரு அப்பொழுது அதை அறிந்திருக்கவில்லை. அந்த வாக்குத்தத்தம் பற்றி அவர் எண்ணியிருந்தால், "அவர்கள் முதலில் யூதர்கள் ஆனால் ..." என்ற வார்த்தைகளை சேர்த்திருப்பார்.

[31]இரட்சிப்பு "முன்பு யூதருக்கும் பின்பு கிரேக்கருக்கும்" உரியது (ரோமர் 1:16). 13:45, 46, ரோமர் 2:9, 10 ஆகியவைகளையும் காணவும். [32]இது இஸ்ரவேலுக்கு மட்டுமல்ல, அமெரிக்கா, இந்தியா மற்றும் இவ்விஷயம் செல்லுகின்ற எல்லா நாடுகளுக்கும் உரியதாகும். [33]3:12ல் பேதுருவின் பிரசங்கம்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தாலும், 4:2 "அவர்கள் ஜனங்களுடனே பேசிக்கொண்டிருக்கையில்" என்று கூறுகின்றது.